**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.438/2022**

**தேதி : 26.08.2025**

**(வா.சா.1) – கணேசன்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:– (பிரதிவாதிகள் தரப்பில்)**

1. நான் கிரையம் வாங்கிய 3 ல் 1 பங்கு சொத்திற்கு சம்பந்தப்பட்ட கிணறானது சர்வே எண் 112/2 மற்றும் 112/3 இரண்டிலும் சேர்த்தாற்போல் உள்ளது என்றால் சரிதான். அதில் காளியப்பக்கவுண்டர் வகையறாவுக்கு 6 ல் 3 பாகம்என்றும், என் மாமனார் வகையறாவுக்கு 6 ல் 3 பாகம் பொது பாத்தியம் என்றும் சொன்னால் சரிதான். காளியப்பக்கவுண்டர் வகையறாவுக்கு கிணற்றில் 6 ல் 3 பாகம் இருக்குமெனில் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக ஏன் சேர்க்கவில்லை என்று கேட்டால் நான் அழைத்தபோது அவர்கள் வழக்கில் சேர்ந்துகொள்ள மறுத்துவிட்டார்கள்.

2. என் மனைவி அ.வ.எண் 121/2013 என்ற வழக்கை அவரது உடன்பிறந்தவர்கள் மீது தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என் மனைவிக்கு மேற்படி சொத்தில் எப்போதும் பொதுப்பாத்தியம் மட்டுமே இருந்தது என்று சொன்னால் என் மனைவியுடன் பிறந்தவர்கள் என் மனைவிக்கு மேற்கு கோட்டில் சொத்தை ஒதுக்கியிருந்தார்கள். அவ்வாறு பாகம் ஒதுக்கப்பட்டது எந்த வருடம் என்றால் ஞாபகம் இல்லை. யார் யார் முன்னின்று பாகம் பிரிக்கப்பட்டது என்றால் குப்புலட்சுமி அம்மாள், நாச்சிமுத்து, ராஜேஸ்வரி மற்றும் என் மனைவி ஆகியோர் சேர்ந்து பாகம் பிரித்தோம். வேறு யார் முன்னின்று பைசல் செய்தார்கள் என்றால் நாங்கள் வேறு யாரிடமும் பைசல் வைக்கவில்லை. நாங்கள் எந்தத் தேதியில் சொத்தை அளந்தோம் என்றால் தேதி ஞாபகம் இல்லை. சர்வேயருக்கு கட்டணம் செலுத்தி அளந்தோமா என்றால் பணம் செலுத்தினோம். சர்வேயர் எங்களுக்குரிய பூமியை அளந்து ஒதுக்கினாரா என்றால் இல்லை, அவர் மொத்த

நிலத்தையும் அளந்தார். அவ்வாறு அளந்தது நான் கிரையம் வாங்குவதற்கு முன்பா பின்பா என்று கேட்டால் நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாக பாகப்பிரிவினை வழக்கில் தீர்ப்பு ஏற்பட்ட உடன் நடந்தது.

3. அவ்வாறு அளப்பதற்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு சர்வேயர் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் அப்போது அவர்கள் கிரையம் வாங்கியிருக்கவில்லை. 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த குப்புலட்சுமிக்கு சர்வேயர் அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் குப்புலட்சுமியும் வாங்குவதற்கு முன்பாகவே அளந்துவிட்டோம். அவர் கிரையம் வாங்கிய பிறகும் சொத்தை அளந்தோம். அவ்வாறு இரண்டு முறை அளந்தபோதும் சர்வேயர் குப்புலட்சுமிக்கு அறிவிப்பு வழங்கவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய வழக்குரையில் குப்புலட்சுமியை தாவா சொத்தை தனியாக ஒதுக்கிவிட்டு விவசாயம் செய்ததாக கூறியிருப்பது சரியா என்றால் சரிதான்.

4. என் மனைவி தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கில் அவருக்கு 3 ல் 1 பாகம் தீர்ப்பானது அதன்பிறகு, இறுதிநிலைத் தீர்ப்பாணை உத்தரவு ஏற்பட்டதா என்றால் இல்லை, அதற்குள் என் மைத்துனர் இறந்துவிட்டார். வா.சா.ஆ.1 என்னுடைய பெயரிலுள்ள கிரைய ஆவணத்திற்கு வாசகங்களை சொன்னது யார் என்றால் ஆவண எழுத்தருக்கு நான் தான் ஆவணங்கள் கொடுத்தேன். அவர் ஆவணம் எழுதினார். என் மாமனாரின் கிரைய ஆவணத்தையும் சிட்டா நகலையும் ஆவண எழுத்தரிடம் நான் கொடுத்தேன். சொத்தை அனுபவிக்கிறோம் என்பதற்கு கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று ஏதேனும் வாங்கிக்கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் உள்ள சொத்து விபரத்திற்கு நான்குமால் விபரங்களை ஆவண எழுத்தரிடம் யார் சொன்னார் என்றால் நான்தான் கூறினேன்.

5. சர்வேயர் வைத்து அளந்ததன் அடிப்படையில்தான் நான்குமால் விபரங்களை

ஆவண எழுத்தரிடம் கூறினேனா என்றால் ஆமாம். அந்த நான்குமால் எல்லையில் உள்ள அளவுகளை ஆவண எழுத்தரிடம் கூறினேனா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய பிறகு பட்டா பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் பெயர் மாற்றம் செய்ய விடவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 வரைபடத்தில் வழக்குச்சொத்தின் அளவுகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதில் ஆக்கிரமிப்பு செய்வதாக குறிப்பிட்ட மஞ்சள் நிற பகுதி மற்றும் பச்சை நிறத்தில் உள்ள பகுதி எத்தனை விஸ்தீரணம் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாக சொத்தை அளந்து விஸ்தீரணம் கண்டுள்ள நிலையில், ஏன் என்னுடைய கிரைய ஆவணத்தில் அளவீடுகள் குறிப்பிடவில்லை என்று கேட்டால் என் மைத்துனர் இறந்துவிட்ட நிலையில் நாங்கள் மொத்தமாகத்தான் சொத்தை அளந்துள்ளோம், தனிப்பட்டு அளக்கவில்லை. வா.சா.ஆ.12 வரைபடத்தில் அளவீடுகள் குறிப்பிடாமல் இருந்துள்ளதற்கு என்ன காரணம் என்று கேட்டால், குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை. எனக்கு அளந்து ஒதுக்கியதாக சொல்லப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்குத் தெரியாது எனக்கு ஒதுக்கிய பூமியை குறிப்பிட்டுள்ளேன்.

<u>6.</u> நான் கிரையம் வாங்கிய விவரத்தை பிரதிவாதிகளுக்கு தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவிக்கவில்லை. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு பட்டா பெறவில்லை என்றால் ஆட்சேபணை கொடுத்துள்ளதால் நான் பட்டா பெறவில்லை. நான் பட்டா மாறுதல் செய்யக்கோரி அளித்த மனுவிற்கு சர்வேயர் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. நான் எனது கிரையப்பத்திரத்தின் மூலம் சர்வேஎண் 112/2 நிலத்தின் மேற்குகோட்டில் கிரையம் பெற்றதாக கண்டுள்ளது. அந்த நிலத்திற்குரிய கிணறு அந்த சர்வே எண்ணின் கிழக்கு கோடியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றுக்கு செல்வதற்கு சர்வே எண் 112/2 ன் தெற்குகோடியில் கிழமேலாக கிணற்று வரை பாதை செல்கிறது என்றால் சரிதான். சர்வே எண் 112/2 ல்

மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 19 செண்ட் என்றால் சரிதான். மேற்படி விஸ்தீரணம் கிணற்றையும் உள்ளடக்கியது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியதாக சொல்வது 1 ஏக்கர் 6 ¼ செண்ட் என்றால் சரிதான். அந்த 1 ஏக்கர் 6 ¼ செண்ட் வா.சா.ஆ.1 வரைபடத்தில் மேற்கு கடைசியில் உள்ளது. அந்த 1 ஏக்கர் 6 ¼ செண்டில் கிணற்று பாத்தியம் மற்றும் தட பாத்தியம் சேர்ந்துள்ளதா என்றால் ஆமாம். அந்த 1 ஏக்கர் 6 ¼ செண்டில் விவசாய நிலம் எவ்வளவு பாதை மற்றும் கிணற்றுக்குரிய நிலம் எவ்வளவு என்றால் அளந்து பார்த்தால் தான் கூற இயலும். சர்வேயர் வைத்து அளந்து பார்க்கும்போது மேற்படி நிலம் மற்றும் பாதையை நான் அளக்கவில்லை என்றால் சரிதான். நான் பத்திரம் எழுதும்போதும் மேற்படி விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 வரைபடத்தில் பச்சை வண்ணமிட்ட பகுதிக்கு மேற்குபுறம் இருப்பது தேவதாகுடி வலசு ஊர் என்றால் சரிதான். அந்த பச்சை வண்ணமிட்ட பகுதிக்கு வடக்குப்புறம் கிழமேல் தார் ரோடு என்றால் சரிதான். சர்வே எண் 112/2 ல் கிணற்றுக்குரிய மின்இணைப்பு மற்றும் கம்பம் உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றின் மின்மோட்டாரில் 6 ல் 1 பங்கு எனக்குப் பாத்தியம். 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு பொதுவில் 6 ல் 1 பாகம் உள்ளது என்றால் சரிதான். அந்தக் கிணறு மொத்தம் எத்தனை செண்ட் என்றால் அளந்தால் தான் தெரியும்.

7. நான் பொதுவில் பாத்தியப்பட்ட 3 ல் 1 பாகம் நிலத்தை கிரையம் பெற்றுக்கொண்டு ஊரடி நிலத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பதற்காக நான்குமால் குறிப்பிட்டு கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் என் மனைவி மக்களும் ஒரே குடும்பமாக இருக்கும் நிலையில், மேற்கு பகுதி நிலத்தை கைப்பற்றவேண்டுமென்பதற்காக கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளதாக சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தனிப்பட்டு விளம்புகை கோரவில்லை என்றும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. 3 ல் 2 பங்கிற்கு உரிமையுள்ள பாகஸ்தர் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது

**என்று சொன்னால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதவர்கள் என்று சொன்னால் அவர்களை நான் தரப்பினராகச் சேர்க்கவில்லை. கிணற்றுக்குரிய 6 ல் 3 பாகஸ்தர்களான காளியப்பக்கவுண்டர் வகையறாவை தரப்பினர்களாகச் சேர்க்ககாததால் தாவா தள்ளுபடியாகவேண்டுமென்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு மோசடியாக கிரைய ஆவணம் ஏற்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.**

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.08.26 17:18:01 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**